125

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

கல்விப் பீடம்

விசேட தேவைகள்சார் கல்வித்துறை

சிறப்புக் கல்விமாணி (விசேட தேவைகள்சார் கல்வி) நிகழ்ச்சித் திட்டம் - 2020/2021

SNU5338/ESU3138- விசேட தேவைகள் மற்றும் கற்றற் தேவைகளுக்கான அறிமுகம்

இறுதிப் பரீட்சை - 2021

பகுதி - I இல் அனைத்து வினாக்களுக்கும் பகுதி - II இன் ஏதாவது மூன்று (03) வினாக்களுக்கும் விடையளிக்குக.

காலம் : மூன்று (03) மணித்தியாலங்கள்

திகதி : 01.08.2021 நேரம் : பி.ப 01.30 - பி.ப 04.30

## பகுதி I

01. விழிப்புலக் குறைபாட்டின் ஐந்து (5) பொதுவான வகைகளையும் பட்டியற்படுத்துக.

02. செவிப்புல இழப்பின் நான்கு (4) வகைகளையும் பெயரிட்டு அவற்றுள் ஒன்றினை (1) உதாரணங்களை முன்வைத்து சுருக்கமாக விளக்குக.

03. பேச்சு மற்றும் மொழிசார் ஒழுங்கீனத்தை உங்களது சொந்த மொழிநடையில் வரைவிலக்கணப்படுத்துக.

04. சிறுதலைக் குறைபாட்டின் பொதுவான அறிகுறிகள் ஐந்தினை (5) பெயரிடுக.

05. தசைநார் தேய்வின் நான்கு (4) வகைகளையும் சுருக்கமாக விளக்குக.

06. மனநலக் குறைபாட்டிற்கான அமெரிக்க அமைப்பினரால் 'மனநலக் குறைபாடு' என்பதற்கு முன்வைக்கப்பட்ட வரைவிலக்கத்தினைக் குறிப்பிடுக.

07. ஓட்டிசத் திருசிய நிலையையுடைய பிள்ளைகள் வெளிப்படுத்தும் பொதுவான ஐந்து (5) பண்பியல்புகளை விளக்குக.

08. சொல்சார் கற்றல் இயலாமைகளையுடைய பிள்ளைகளின் பண்பியல்புகள் ஐந்தினை (5) பெயரிடுக.

(5X8=40 புள்ளிகள்)

## பகுதி II

09. i. ஐக்கிய அமெரிக்காவிலுள்ள இயலாமையுள்ள பிள்ளைகளுக்கான தகவல் பரப்பு நிலையத்தின் அடிப்படையில் விழிப்புலக் குறைபாடுள்ள மாணவர்களை விபரிப்பதற்கு கல்விப்புலத்தில் பயன்படுத்தப்படும் நான்கு (4) பதங்களையும் விளக்குக.

(2x4= 8 புள்ளிகள்)

ii. ஒரு உள்ளடங்கல் வகுப்பறையின் ஆசிரியராக குறும்பார்வைப் பிரச்சினையுள்ள மாணவர்களுக்கு நீங்கள் உதவக்கூடிய ஐந்து (5) வழிகளை உதாரணங்களை முன்வைத்து விளக்குக.

(12 புள்ளிகள்)

10. i. மூளை முடக்குவாதத்திற்கான (மூளையச் சோர்வு) காரணிகள் நான்கினை (4) விளக்குக.

(2x4 = 8 புள்ளிகள்)

ii. மூளை முடக்குவாதம் (மூளையச் சோர்வு) உள்ள மாணவர்களிடம் காணப்படும் ஐந்து (5) வகையான இயக்கப் பிரச்சினைகளைப் பெயரிட்டு அப்பிரச்சினைகளில் இருந்து அவர்களை விடுவிப்பதற்கான உங்களது பரிந்துரைப்புக்கள் ஐந்தினை (5) உதாரணங்களை முன்வைத்து விளக்குக.

(12 புள்ளிகள்)

11. i. அறிவுசார் இயலாமையுடைய பிள்ளைகளின் தழுவல் நடத்தைகளை விருத்தி செய்வதற்கான திறன்களின் முக்கியத்துவத்தினை உதாரணங்களை முன்வைத்து விபரிக்குக.

(8 புள்ளிகள்)

ii. கல்விச் செயற்பாட்டில் ஈடுபடுத்தக்கூடிய அறிவுசார் இயலாமையுள்ள பிள்ளை ஒன்றிற்கு, ஒரு ஆசிரியராக அப்பிள்ளையின் கற்றலுக்கு எவ்வாறு உதவுவீர் என்பதை நான்கு (4) உதாரணங்களை முன்வைத்து விளக்குக.

(12 புள்ளிகள்)

12. i. எழுத்துசார் இயலாமை என்ற பதத்தை விளக்கி அவ்வியலாமையின் பண்பியல்புகள் நான்கினை (4) பெயரிடுக.

(2x4 = 8 புள்ளிகள்)

ii. எழுதல்சார் இயலாமையுடைய மாணவனுக்கு வழங்கக்கூடிய கல்வி முறைகள் தொடர்பாக ஐந்து (5) பரிந்துரைப்புக்களை முன்வைக்குக.

(12 புள்ளிகள்)

13. i. அதீத செயலூக்கம் ஒழுங்கீனம் மற்றும் அவதானக் குறைபாடு (ADHD) உடைய மாணவர்களில் நீங்கள் அவதானிக்கக்கூடிய பண்பியல்புகள் நான்கினை (4) விளக்குக.

(2x4 = 8 புள்ளிகள்)

ii. ஒரு உள்ளடங்கல் வகுப்பறையில் அதீத செயலூக்க ஒழுங்கீனம் மற்றும் அவதானக் குறைபாடுகள் உள்ள மாணவர்களின் நடத்தையை எவ்வாறு முகாமை செய்வீர் என்பதை பொருத்தமான உதாரணங்களை முன்வைத்து விளக்குக.

(12 புள்ளிகள்)

14. i. ஆற்றல்மிக்க மற்றும் மீத்திறன் உள்ள மாணவர்கள் என்பதனை உங்களின் சொந்த மொழிநடையில் வரைவிலக்கணப்படுத்துக.

(8 புள்ளிகள்)

ii. அ. வகுப்பறைச் சூழலில் மீத்திறன் உள்ள மற்றும் ஆற்றல் மிக்க மாணவர்கள் எதிர்கொள்ளும் சமூக மற்றும் மனவெழுச்சிப் பிரச்சினைகளை விளக்குக.

ஆ. அப்பிரச்சினைகளை சரிசெய்வதற்கு தங்களின் பரிந்துரைகளைத் முன்வைக்குக.

(6X2 = 12 புள்ளிகள்)

பதிப்புரிமை பெற்றது